**அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் தேசிய அளவில் விஞ்ஞானிகள், அறிவியல் அறிஞர்கள் இணைந்து கடந்த பிப்ரவரி-28 அன்று கொல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிட்ட அறிவியல் மனப்பான்மை பிரகடனத்தின் மீதான அறிக்கை:**

இந்தியா என்று அழைக்கப்படும் பாரதம் பல நூற்றாண்டுகளாக இந்துஸ்தானமாக வளர்ந்து வந்துள்ளதாக நம்ப வைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்து அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற பிறகும் மத அடிப்படையில் நாடு பிளவுபட்ட அனுபவத்திற்கு பிறகும் பல்வேறு மதங்களை சேர்ந்த மக்கள் இந்த நிலத்தில் ஒன்றிணைந்து வாழவே விரும்பினார்கள். எனவே இது மதவெறி பாரம்பர்யம் கொண்ட நாடு அல்ல என்பது தெளிவானது. மதங்கள் குறித்த நவீன விளக்கங்களை ஏற்றுக்கொண்ட நிலமாகவும் உள்ளது.

இந்தியா பல்வேறு பண்பாட்டு மரபுகளை கொண்ட மக்களை ஒன்றிணைத்து வாழும் ஒரு வளமான பாரம்பர்யம் கொண்ட நாடு. உலகளாவிய உண்மைகளை நமது மதங்களில் ஆராய்ந்துள்ளனர். பல்வேறு வகையான உணவு, உடை, மற்றும் பல மொழிகளை மதிப்பது மக்களின் முக்கிய நாகரிகமாக இருந்துள்ளது.

கடவுள் நம்பிக்கையாளர்கள் மட்டுமல்ல கடவுள் மறுப்பாளர்களும் இணைந்து வாழ்ந்துள்ளனர் நம் நாட்டில் பொருள்முதல்வாத சிந்தனைகளும் வளர்ந்துள்ளது உதாரணம் லோகாயுதம் என்ற தத்துவம் இந்தியாவில் உருவாகியுள்ளது. புத்தரின் போதனைகளை அடிப்படையாக வைத்து உருவான பௌத்த தத்துவத்தின் மூலம் பரவிய சமத்துவ கருத்துகள் பெரும்பகுதி மக்களை ஈர்த்ததால் பல்வேறு சீர்த்திருத்தங்கள் புரட்சிகரமான மாற்றங்கள், பழமைவாதத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வு மரபுகள் ஆகியவை வளர்ந்துள்ளது. சூஃபி ,பக்தியை பின்பற்றும் ஆண்மீக சொற்பொழிவாளர்களும் பசவா கபீர், குருநானக், நாராயண குரு, ஐயங்காளி, பெரியார் போன்ற பல சீர்திருத்த தலைவர்களும் இந்தியாவின் பன்முகத்தன்மையும் , வேற்றுமையில் ஒற்றுமை என்பதை அழுத்தமாக வலியுறுத்தி வந்தனர்.

சுதந்திர போராட்டத்தில் பங்கேற்ற இயக்கங்கள், அரசியலமைப்பு குறித்த பார்வையோடு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் மக்கள் ஒற்றுமை ஆகியவற்றில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருந்ததுள்ளனர். அதில் பெரும்பான்மையினர் சமூக பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக நீதி போன்றவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்தினர். மேலும் இந்திய அரசியலைமைப்பு சட்டத்தில் பொதிந்துள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் அரசிற்கு வழிகாட்டும் நெறிமுறைகள் ஆகியவற்றை குறித்தும் தொடர்ந்து விவாதித்துள்ளனர்.

மக்கள் பொதுவாக வரலாற்று அறிவை பெற்றவர்களாகவும் திறமையாளர்களாகவும் பன்முக கலாச்சாரத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்துபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். வேளான் உணவு முறையில் உள்ள பன்முகத்தன்மையும், உடல்பயிற்சி உள்ளிட்ட உடல்-மன நலன் சார்ந்த அனைத்தையும் மக்கள் அனுபவித்து வந்துள்ளனர், சமூக பொருளாதார அரசியல் சுதந்திரத்தை மறுப்பவர்களுக்கு எதிராகவும் வேற்றுமையில் ஒற்றுமை எனும் பண்பாட்டு உணர்வுக்கு எதிராகவும் செயல்பட்ட

பிரிவினைவாதிகள் ,மற்றும் குறுங்குழுவாதிகளுக்கு எதிராகவும் மக்கள் செயல்பட்டுள்ளனர். தற்போது மீண்டும் ஒருமுறை அந்த எதிர்ப்புணர்வை பின்பற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.

ஜே.சி.போஸ், அம்.விஸ்வேஸ்வரய்யா, பி.சி.ராய், சி.வி.ராமன், எம்.என்.சாஹா, பி.சி.மஹன்லான்பிஸ் எஸ்.என்.போஸ், எஸ்.எஸ்.சோக்கே, எஸ்.எஸ்.பட்நாகர், ஹோமி பாபா, விக்ரம் சாராபாய், சதீஷ் தவான், ஆகிய அறிவியல் விஞ்ஞானிகள் நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பையும் நாம் மறுபடியும் நினைவுகூற வேண்டும்.இவர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் இருந்த ஆதிக்கத்தை எதிர்கொண்டவர்கள். இந்தியாவில் அறிவியல் வளர்ச்சிக்கான கொள்கை தீர்மானத்தின் நோக்கங்களையும் செயல்திட்டத்தையும் உருவாக்கியதில் முக்கிய பங்காற்றினார்கள். நம் நாடு சுயசார்புத் தன்மையை அடைய வேண்டும் என விரும்பினார்கள், நாட்டின் வளர்ச்சிக்கான கொள்கை உருவாக்கத்தில் அறிவியல் அனுகுமுறையை ஏற்றுக்கொண்டதிலும் விஞ்ஞானிகளின் பங்கும் முக்கியமானது. பொதுவாக அறிவியல் மற்றும் தொழிநுட்ப சமூகம் நியாயமற்ற முறையில் மக்களை துன்புறுத்த அனுமதிக்காது,. மேலும் உலகளவில் உள்ள உயர்கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், மற்றும் மனித நேயம் ஆகியவற்றில் நிலவும் பன்மைத்துவத்தை அறிவியல் சமூகம் அங்கீகரிக்கும்..

இந்திய சுதந்திர போராட்டத்திற்கு பிறகு உருவான அரசமைப்பில் அறிவியல் அனுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் சுய சார்புள்ள நாடாக நம் நாடு வளர வேண்டும் என்பதையும் ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, அம்பேத்கர் போன்ற தலைவர்களும் அவர்களின் கொள்கைகளை பின்பற்றுவர்களும் மற்றும் இடதுசாரி அரசியல் தலைவர்களும் வலியுறுத்தி வந்தனர் எனவே தான் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்திலும் அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம் ஆகியவற்றின் முக்கியத்துவம் இடம்பெற்றது. 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தேசிய பாடத்திட்ட தயாரிப்பிலும்., 2008 ஆம் ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்வி உரிமை சட்டம் உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான சட்டங்களும் அமுலானது, இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சமூகத்தினரும் மற்றும் பொது மக்களும் இதன் மூலம் பல நன்மைகளை அடைந்தனர் தற்போது ஆபத்தான சூழலில் இருக்கும் இந்த உரிமைகளை நாம் ஒன்றினைந்து பாதுக்காக்க வேண்டும்.

மதங்களுக்கிடையேயான ஒற்றுமை, பரந்தநோக்கம் கொண்ட அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள் ஆகியவை இந்தியாவில் ஏற்கனவே ஆழமாக வேரூன்றி உள்ளது. அறிவியல் சமூகம் இந்தியாவின் பழமைவாய்ந்த அறிவியல் பங்களிப்பையும் பன்முகத்தன்மை சார்ந்த உரையாடல்களையும் அங்கீகரிப்பதோடு புராணங்களை வரலாறாகவும் புனைவுகளை அறிவியலாகவும் திரிக்கும் பிரச்சாரத்திற்கு எதிராகவும் செயல்பட வேண்டும். இந்தியாவின் பழைய பாரம்பர்யத்தில் நிலவி வந்த சாதி-இன அடிப்படையிலான வேறுபாடுகள், பாலின பாகுபாடுகள், ஆகியவற்றை மறைக்க புதிய போலியான கதைகள் உருவாக்கப்படுகிறது இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்

பழங்காலத்திலும் இடைக்காலத்திலும் பிராமணியத்தையும், சாதிய ஒடுக்குமுறையையும் மக்கள் எதிர்த்தது போலவே தற்போது இந்திய பெண்கள், இளைஞர்கள், பழங்குடியின மக்கள் தலித் மக்கள் ஆகியோரிடையே

அறிவியலுக்கு புறம்பான கருத்துக்களை திணிக்கப்படும் போக்கை எதிர்க்க வேண்டும்., பள்ளி கல்லூரி உள்ளிட்ட உயர்கல்வித்துறையில் வளர்த்தெடுக்கப்படும் அறிவியல் மனப்பான்மைக்கு எதிரான முயற்சிகளை. கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என நாலாப்பக்கமும் உள்ள நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து மக்களை ஒன்றிணைத்து எதிர்ப்புணர்வை பதிவு செய்ய முயற்சிக்க வேண்டும்.

தேசிய கல்விக்கொள்கை -2020 ஏற்றுக்கொள்ளாத மாநிலத்தையும் மிரட்டி ஏற்றுக்கொள்ள வைப்பது அப்பட்டமான அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான செயல். மாநிலங்களின் மீதான இந்த தினிப்பு நடவடிக்கை நாட்டின் ஒற்றுமையை வெகுவாக பாதிக்கும். தேசிய கல்விக்கொள்கையில் இந்தியாவின் மதச்சார்பற்றத்தன்மையும் , ஜனநாயக பங்களிப்பையும் சமூக முன்னேற்றம் மற்றும் சகோதரத்துவத்தையும் மறுக்கும் சாராம்சங்கள் இடம்பெற்றுள்ளது இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு இந்துத்துவா சித்தாந்ததை போதிக்க ஏதுவாக இருக்கிறது. இதனை ஒன்றினைந்து எதிர்க்கத்தான் மக்கள் அறிவியல் இயக்கம் அனைவரையும் அழைக்கிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தரமான பொது நோக்கம் கொண்ட மேம்படுத்தப்பட்ட கல்வியை அமைக்க நம்மை அர்பணித்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

மக்கள் அறிவியல் இயக்கத்தினர்களாகிய நாம்....

அரசமைப்பு சட்டப்பிரிவு 51-A(h) வலியிறுத்தும் ஒவ்வொரு குடிமகனும் அறிவியல் மனப்பான்மை வளர்த்துக்கொள்ளுதல் மனிதநேயம், விமர்சனபூர்வமாக கேள்விக்கேட்கும் திறன் ஆகியவற்றோடு நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதும், கலைகளின் மேம்பாட்டிற்கு கவனம் செலுத்துவதையும் உறுதியளிக்க வேண்டும். மொழியியல் மற்றும் இந்தியாவின் சமூக கலாச்சார பன்முகத்தன்மையை வளர்ப்பதற்கும் உலகளிலான சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கும் இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மையை கடைபிடிப்பது ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க சோசலிச சிந்தனையை வளர்ப்பதற்கும், சமூக பொருளாதார சமத்துவம் சூழலியல் நீதி ஆகியவற்றிக்காக போராடும் இயக்கங்களுக்கு ஆதரவாக பங்களிப்பு செய்ய வேண்டும்.. கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் ஒட்டுமொத்த இந்திய மக்களின் கன்னியமான வாழ்க்கைக்கு உத்திரவாதமளிக்க முயற்சிக்க வேண்டும். முற்போக்கான ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிரான எங்களது உழைப்பை இரட்டிப்பாக்குகிறோம். இந்தியாவின் சமூக பொருளாதாரம் சார்ந்து எடுக்கப்படும் முடிவுகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் துறை சார்பாக முக்கிய பங்களிப்பை செய்வோம் என உறுதியளிக்கிறோம்.

தாரா ஷிகோ, சாவித்ரிபாய் மற்றும் ஜோதிராவ் புலே, ரமாபாய், ரவீந்திரநாத் தக்கூர், நேரு, காந்தி, பெரியார் அம்பேத்கர், ஈ.எம்.எஸ்., அஷ்பகுல்லா, பகத்சிங், சுபாஷ் சந்திர போஸ், விக்ரம் சாராபாய், ஹூசைன் ஜாஹீர், அபில்கலாம் ஆசாத் மற்றும் பலர் தங்களுடைய அரசியல் நிலைபாட்டில் நின்று இந்த நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டனர். மேற்கூறியவர்களில் பலர் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உருவாக்கத்தில் பங்களிப்பு செய்தனர். இந்தியாவின் மதச்சார்பற்ற தன்மைக்கும் முற்போக்கு சிந்தனையையும் மக்களிடையே பரப்புவதற்காக உழைத்தனர்.

அறிவியல் சமூகத்தை சேர்ந்தவர்கள் கல்விசார் சுதந்திற்காகவும், ஜனநாயாக இயக்கத்திற்கும், குடிமை சமூக மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும், கருத்து சுதந்திரம் மற்றும் அரசமைப்பு சட்டத்தை பயன்படுத்தி போராடவும் உதவியாக இருந்தனர்.பொய்களையும் சமூக விரோத செயல்களையும் எதிர்து நின்றனர்

பகுத்தறிவாளர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், மனிதநேய மிக்கவர்கள், அறிவியல் ஆசிரியர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஆகியவற்றுடன் இணைந்து சமூக முன்னேற்றத்திற்கான இலக்குகளை அடைய நாம் முயற்சிக்க வேண்டும் அதற்கான கொள்கைகளை முன்மொழிய வேண்டும். அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், உலக அமைதி வளர்ப்பதற்கு தடையாக இருக்கும் சவால்களை எதிர்க்க வேண்டும்.